இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 20-07-2023

# குட்கா அ.தி.மு.க.வை காப்பாற்றும் பா.ஜ.க.!

**குட்கா முறைகேடு தொடர்பான வழக்கில் கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சி.பி.ஐ.க்கு 11 ஆவது முறையாக கால நீட்டிப்பு வழங்கி உள்ளது சென்னை சி.பி.ஐ. நீதிமன்றம்.- இது செய்தி.**

**குட்கா அ.தி.மு.க.வை 11 முறையாக காப்பாற்றிக் கொண்டு இருக்கிறது பா.ஜ.க. - இதுதான் உண்மை!**

தமிழ்நாட்டில் தடையை மீறி, அதிகாரிகளுக்கு லஞ்சம் அளித்து குட்கா பொருட்கள் விற்றது தொடர்பாக, குட்கா குடோன் உரிமையாளர்கள் மாதவ ராவ், சீனிவாசராவ், உமாசங்கர் குப்தா, உணவு பாதுகாப்பு துறை அதிகாரி செந்தில்முருகன், மத்திய கலால் துறை அதிகாரி நவநீத கிருஷ்ண பாண்டியன், சுகாதாரத்துறை அதிகாரி சிவக்குமார் ஆகிய 6 பேர் மீது வழக்குப் பதிவு செய்த சி.பி.ஐ., கடந்த 2021ம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் பட்டியல் இத்துடன் நிற்கவில்லை.

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் அமைச்சர்களாக இருந்த பி.வி.ரமணா, சி.விஜயபாஸ்கர் ஆகியோர் சிக்கினார்கள். அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் டி.ஜி.பி.யாக இருந்த டி.கே.ராஜேந்திரன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஜார்ஜ் ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டவர்கள். இந்த 11 பேருக்கு எதிராக கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை சி.பி.ஐ. நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

அதில் பல்வேறு தவறுகள் இருப்பதால் அதனை திருத்தம் செய்து முழுமையாக தாக்கல் செய்ய விசாரணை அதிகாரிக்கு உத்தரவிட்டது சி.பி.ஐ. நீதிமன்றம். கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய சி.பி.ஐ. க்கு அனுமதி அளித்தது.

ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கு எதிராக புகார்கள் எழுப்பி விசாரணை நடத்த வேண்டுமானால் ஒன்றிய அரசின் அனுமதி தேவை. ஊழலுக்கு எதிராக நாளும் குரல் கொடுத்து வரும் பிரதமர் மோடி - உள்துறை அமைச்சர் அமித்ஷா - ஆளுநர் ஆர்.என்.ரவி போன்றவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? இந்த குட்கா கும்பலான அ.தி.மு.க. ஆட்சி கால ஆட்களை விசாரித்து அவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அனுமதி வழங்கி இருக்க வேண்டுமல்லவா? அதனைச் செய்யவில்லை.

**செந்தில் பாலாஜி வீட்டுக்கு வருமான வரித்துறை ரெய்டு போனதும் அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கத் துடித்த ஆளுநர் ஆர்.என். ரவி, தன்னுடைய வேண்டுகோளை டெல்லியை நோக்கி வைத்து சி.பி.ஐ.க்கு அனுமதியை பெற்றுத் தரத் தயாராக இருக்கிறாரா? நீட்டி முழங்குவாரே ரவி? 11 முறையாக சி.பி.ஐ. கால நீட்டிப்பு வாங்கி உள்ளதே. அந்த சி.பி.ஐ.யை கண்டிப்பாரா? சி.பி.ஐ.க்கு அனுமதி தராத ஒன்றிய அரசை கண்டிப்பாரா ஆளுநர்?**

**தமிழ்நாடு காவல் துறை முன்னாள் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை நடத்த ஒன்றிய அரசு அனுமதியளித்தது. ஆனால் சி.பி.ஐ. வழக்கில் உள்ள மேலும் சிலரிடம் விசாரணை நடத்தவும், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவும் அனுமதி அளிக்கவில்லை. விசாரணை நடத்தலாம், குற்ற ப்பத்தி ரிக்கை தாக்கல் செய்யக் கூடாது என்பது என்ன நியாயம்? அமலாக்கத்துறையும், வருமான வரித்துறையும் பா.ஜ.க.வின் எதிரிகள் மீது பாயும் வண்ணம் செட்டப் பண்ணி வைத்துள்ளார்களே அதுமாதிரியா இதுவும்?**

10 ஆவது முறை கால நீட்டிப்பு கேட்டது சி.பி.ஐ."குட்கா முறைகேடு தொடர்பான வழக்கில், அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் டி.ஜி.பி.யாக இருந்த டி.கே.ராஜேந்திரன் மற்றும் காவல் ஆணையர் ஜார்ஜ் ஆகியோர் மீது விசாரணை நடத்துவது தொடர்பான ஒன்றிய அரசின் அனுமதி கடிதம் இன்னும் கிடைக்கவில்லை. மற்றவர்களுக்கு எல்லாம் அனுமதி கிடைத்துவிட்டது. எனவே கூடுதல் அவகாசம் வேண்டும்" என்று சி.பி.ஐ. நீதிமன்றத்தில் சொல்லியது சி.பி.ஐ. அப்போதே நீதிபதி கண்டித்தார்.

"அரசின் அனுமதி கிடைக்காவிட்டால் இந்த வழக்கையே எப்படி நடத்துவது?" என்று சி.பி.ஐ. நீதிமன்ற நீதிபதி மலர் வாலண்டினா கேள்வி எழுப்பினார். அடுத்த முறை அனுமதியை வாங்கிவிடுவோம் என்றது சி.பி.ஐ. ஆனாலும் அனுமதி கிடைக்கவில்லை.

இந்நிலையில் இந்த வழக்கு நீதிபதி மலர் வாலண்டினா முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தபோது, சி.பி.ஐ. தரப்பில், குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு சிலருக்கு எதிராக விசாரணை மற்றும் கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது தொடர்பாக இன்னும் ஒன்றிய அரசின் அனுமதி கிடைக்கவில்லை எனவும், திருத்தப்பட்ட கூடுதல் குற்றப்பத்திரிகையை அளிக்க கூடுதல் கால அவகாசம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது. வழக்கின் விசாரணையை ஆகஸ்ட் 11-ஆம் தேதிக்கு நீதிபதி தள்ளி வைத்தார்.

**ஒன்றிய அரசின் அனுமதி கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காகவே இந்த வழக்கு 11 வது முறையாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக என்ன தெரிகிறது? குட்கா அ.தி.மு.க. கும்பலை பா.ஜ.க. காப்பாற்றுகிறது.**

மாநில அமைச்சரவையும் அந்த இசைவு ஆணை கோரும் சி.பி.ஐ.யின் கோரிக்கையை ஆளுநர் அலுவலகத்துக்கு கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் (12.9.2022) அனுப்பியதாகவும், ஆனால் இதுவரையில் இந்தக் கடிதம் தொடர்பாக எவ்வித பதிலும் கிடைக்கப் பெறாமல் முன்னெப்போதும் இல்லாத வகையில் தாமதப்படுவதால் இந்த வழக்கில் எவ்வித மேல் நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை என்றும் சட்ட அமைச்சர் ரகுபதி தெரிவித்துள்ளார்.

**குட்கா அ.தி.மு.க.வை காப்பாற்றுவது யார்? பா.ஜ.க. தான். ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக இந்த பா.ஜ.க. தான் நடிக்கிறது. இவர்கள் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. தங்களுக்கு எதிரானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அமலாக்கத்துறை, சி.பி.ஐ., வருமான வரித்துறையை பயன்படுத்துகிறார்கள். நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் பா.ஜ.க.வில் சேர்ந்தால், அடுத்த நிமிடமே புனிதர்கள் ஆகிவிடுவார்கள். உலகத்தில் எந்த நாட்டிலும் இத்தகைய கேவலமான முறை இருக்காது என்பதே உண்மை!**

## தமிழ்நாட்டில் மழை பெய்ய வாய்ப்பு!

சென்னை, ஜூலை 20-

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 6 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் அளித்துள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, தமிழ்நாடு, புதுசேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.




சென்னை, மாநிலக் கல்லூரியில் தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் (18.07.2023) நடைபெற்ற "தமிழ்நாடு நாள்" விழாவை முன்னிட்டு அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டார். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் முனைவர் ந.அருள், சமூகநீதிக் கண்காணிப்பு (ம) பாதுகாப்புக் குழுத் தலைவர் சுப.வீரபாண்டியன், தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன், ஆழி செந்தில்நாதன் மற்றும் மாநிலக் கல்லூரி முதல்வர் முனைவர் இரா.இராமன் ஆகியோர் உள்ளனர்.

### முதல்வரின் 'நான் முதல்வன்' தொலைநோக்குப் பார்வைத் திட்டம், 'உயர்வுக்குப் படி' திட்டம் மூலம்

# 15,713 மாணவ - மாணவியர் உயர்கல்வி நிறுவனங்களில் சேர ஏற்பாடு!

*சென்னை, ஜூலை 20-*

*தமிழ்நாடு முதல்வர் அவர்களின் "நான் முதல்வன்" தொலைநோக்குப் பார்வைத் திட்டம், "உயர்வுக்குப் படி" திட்டம் வாயிலாக 15,713 மாணவர்கள் தாங்கள் விரும்பும் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர்.*

*இளைஞர்களின் வாழ்க்கையை வடிவமைப்பதிலும் மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை ஊக்குவிப்பதிலும் கல்வி முக்கியப் பங்கு வகிக்கிறது. இருப்பினும், 12 ஆம் வகுப்பை முடித்த பிறகு மாணவர்களின் இடைநிறுத்த விகிதம் அதிகரிப்பது என்பது மாநிலத்தின் கல்வி வளர்ச்சியைப் பாதிக்கும் ஒரு போக்கு ஆகும். தமிழக இளைஞர்கள் தொழில்முயற்சிகளிலும் அரசாங்கத்தில் பல்வேறு பதவிகளுக்குப் போட்டியிடுவதிலும் சம வாய்ப்புகளை உறுதிசெய்யும் அதே வேளையில், மாநிலத்தின் கல்வி வளர்ச்சியில் முக்கியமான அளவுகோலான உயர் கல்வி மொத்த சேர்க்கை விகிதத்தை (GER) அடைவதில் இந்தச் சிக்கல் குறிப்பிடத்தக்கச் சவாலாக உள்ளது.*

*12 ஆம் வகுப்புக்குப் பிறகு மாணவர்கள் இடைநிற்றல் விகிதத்தைக் குறைப் பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் "நான் முதல்வன்" தொலைநோக்குப் பார்வைத் திட்டம், கல்வி நிறுவனங்களின் அளவி லும் சமூக அளவிலும் பயனுள்ள பாதையை உருவாக்கியுள்ளது. பள்ளிகள் அளவில், நான் முதல்வன் முன்முயற்சியானது, வாழ்க்கை வழிகாட்டி ஆலோசகர்கள் அடங்கிய ஒரு குழுவை உருவாக்கி, எதிர்கால வாழ்க்கைக்கான உள்ளீடுகளை வழங்குவதற்கும், பள்ளிப் படிப்பை முடித்த மாணவர்கள் தங்கள் விருப்பப்படி உயர்கல்வியைத் தேர்வு செய்யவும், விண்ணப்பப் படிவங்களை நிரப்பவும் அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு உதவியது.*

*2022 - 23 கல்வியாண்டில், 3,23,456 மாணவர்கள் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலிருந்து 12 ஆம் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்களில் 2,40,460 பேர் உயர்கல்விக்கு விண்ணப்பிக்கப் பள்ளிகளில் உள்ள நான் முதல்வன் தொழில் பிரிவுகளால் வசதி செய்யப்பட்டது. மீதமுள்ள மாணவர்கள் மாவட்டம் வாரியாக அடையாளம் காணப்பட்டு, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை அமைச்சரின் வழிகாட்டுதலின் கீழ், அவர்கள் உயர்கல்வியைத் தொடரச் செய்யும் வகையில் "உயர்வுக்குப் படி" என்ற முன்முயற்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தின் கீழ் தொடர்புடைய மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஐ.டி.ஐ., பாலிடெக்னிக், பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், அரசுத் துறைகள், வங்கிகள் உள்ளிட்ட அனைத்து கல்வி நிறுவனங்களும் மாணவர்களுக்கு விரிவான சேர்க்கை வாய்ப்புகளை வழங்குவதற்கான முயற்சிகளைத் தீவிரப்படுத்தி வருகின்றன.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் கீழ், மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், ஒவ்வொரு வருவாய்க் கோட்டத்திலும் இரண்டு கட்டங்களாக இந்த முயற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இத்திட்டத்தின் நோக்கம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் விரிவான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குவதும்; மாணவர்களுக்குக் கிடைக்கும் பல்வேறு கல்வி வாய்ப்புகள், உதவித் தொகை மற்றும் ஆதரவு சேவைகள் பற்றிய தகவல்களைப் பரப்புதல், அதற்கு உதவக்கூடிய அமைப்புகள் பற்றி மாணவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆலோசனை வழங்குதல், "புதுமைப் பெண்" போன்ற திட்டங்கள் மற்றும் இதர சமூக நலத்திட்டங்கள், கல்வி நிறுவனங்கள் அல்லது திறன் பயிற்சித் திட்டங்களில் அவர்கள் சேர்வதற்கு வழி வகுக்கும் சேவைகளின் 100% ஒருங்கிணைப்பை உறுதி செய்வதாகும்.*

*நான் முதல்வன் "உயர்வுக்குப் படி" திட்டம் மூன்று கட்டங்களாகத் திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டம் 22.06.2023 முதல் 27.06.2023 வரை தமிழகத்தின் மாவட்டங்களில் உள்ள 34 கோட்டங்களிலும்; இரண்டாம் கட்டம் 30.06.2023 முதல் 04.07.2023 வரை தமிழகத்தின் மாவட்டங்களில் உள்ள 38 கோட்டங்களிலும் மூன்றாம்கட்டம் 07.07.2023 முதல் 08.07.2023 வரை தமிழ்நாட்டின் மாவட்டங்களில் உள்ள 21 கோட்டங்களிலும் திட்டமிடப்பட்டது. பள்ளிக் கல்வித் துறையால் அடையாளம் காணப்பட்ட மாணவர்கள் முதன்மைக் கல்வி அலுவலர் மூலம் பிரிவு முகாம்களுக்குத் திரட்டப்பட்டனர்.*

*சார் ஆட்சியரின் ஏற்பாட்டில், மாவட்ட திறன் மேம்பாட்டு அலுவலர், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஆகியோர் முகாமின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தனர். இந்த முகாம்களில், வங்கிகள் தங்களிடம் உள்ள கல்விக் கடன் திட்டங்களை விளக்கி , பல்வேறு மாவட்டங்களில் உடனடிக் கடன் வழங்க ஏற்பாடு செய்தன. அத்துடன் மாணவர் களுக்கு, உயர்கல்வியின் முக்கியத்துவம், உதவித் தொகை விவரங்கள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் வழங்கப்படும் படிப்புகள், மருத்துவம் மற்றும் பாராமெடிக்கல் படிப்புகள், விவசாயம் மற்றும் அது சார்ந்த படிப்புகள், பாலிடெக்னிக் மற்றும் ஐடிஐ படிப்புகள் மற்றும் அவற்றின் அருகில் உள்ள கல்லூரிகளின் பட்டியலைக் காட்டும் 'கல்லூரிக் கனவு' கையேடு வழங்கப்பட்டது.*

*மேலும், பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள், உதவித்தொகைத் திட்டங்கள், பல்வேறு அரசுத் துறைகள் மூலம் கிடைக்கும் ஆதரவு வலையமைப்பு ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன.*

*மாவட்ட நிர்வாகம், பள்ளிக் கல்வித் துறை, சமூக நலத் துறை, முன்னணி வங்கிகள், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, திறன் மேம்பாடு ஆகியதுறைகளின் ஆதரவுடன் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் திறம்பட ஒருங்கிணைக்கப்பட்ட "உயர்வுக்குப் படி" யின் மூன்று கட்டங்களும் மாபெரும் வெற்றி பெற்றன. இந்நிகழ்ச்சிக்காகத் திரட்டப்பட்ட 30,269 மாணவர்களில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 7,884 பேர், பொறியியல் கல்லூரிகளில் 2,144 பேர், பாலிடெக்னிக் கல்லூரிகளில் 1,461 பேர், ஐ.டி.ஐ.யில் 1,876 பேர் மற்றும் பிற உயர்கல்விப் படிப்புகளில் 2,348 பேர் உட்பட 15,713 மாணவர்கள் தாங்கள் விரும்பும் உயர்கல்வி நிறுவனங்களில் சேர வசதி செய்யப்பட்டுள்ளது.*

*மேலும், மாணவர்கள் உயர்கல்வி நிறுவனங்களில் வெற்றிகரமாகச் சேர்க்கப் படுவதையும், அவர்களின் உயர்கல்வியைத் தீவிரமாகத் தொடர்வதையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து கண்காணிப்பு அமைப்பையும் உருவாக்கியுள்ளது.*

### ஏற்றுமதிக்கான தயார்நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடம்!

## திராவிட மாடல் அரசின் தொலைநோக்கின் கொள்கையை பறைசாற்றுகிறது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலை தளப் பதிவில் பெருமிதம்!

சென்னை, ஜூலை 20-

நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள ஏற்றுமதிக்கான தயார்நிலைக் குறியீட்டில் தமிழ்நாடு முதலிடம் பிடித்ததையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள ஏற்றுமதிக்கான தயார்நிலைக் குறியீட்டில் (Export Preparedness Index 2022) தமிழ்நாடு முதலிடம் பிடித்திருக்கும் சிறப்பான சாதனை என்பது மாநிலத் தொழிற் சூழலின் வலிமையையும், நமது திராவிட மாடல் அரசின் தொலைநோக்கிலான கொள்கைகளையும் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.**

**இதற்குப் பங்காற்றிய அனைவரின் கடின உழைப்புக்கும் அர்ப்பணிப்புக்கும் பாராட்டுகள். வளர்ச்சிக்கும் வளமைக்கும் உகந்த சூழலை வளர்த்தெடுப்பதில் எப்போதும் போல உறுதியாக உள்ளோம்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கடலூர் கிழக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயல்வீரர்கள் கூட்டம் வடலூர் அலுவலகத்தில் 17.07.2023 அன்று பிற்பகல் 12:00 மணி அளவில், மாவட்டக் கழகச் செயலாளரும், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இதில் ஒன்றியச் செயலாளர்கள், மாநகரச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், பொதுக்குழு உறுப்பினர்கள், நகரச் செயலாளர் பேரூர்ச் செயலாளர்கள் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.